செய்தி வெளியீடு எண்: 225 நாள்: 25.03.2012

# செய்தி வெளியீடு

மக்கட் தொகை பெருக்கத்தாலும், தொழில் மயமாக்கலாலும், விலங்குகளின் இயற்கை வாழ்விடங்கள் பாதிக்கப்படுகின்றன. இதனால் உணவு, நீர் மற்றும் வாழ்விடம் ஆகியவற்றிற்காக வன விலங்குகள் இடம் பெயர்ந்து, மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குள் நுழைவதால், மனிதர்கள் வனவிலங்குகளை எதிர்கொள்ளும் சூழ்நிலை உருவாகிறது.

இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில், விலங்குகளின் வாழ்விடங்களை மேம்படுத்துவது, அவை விரும்பி உண்ணும் பயிர்களை காட்டுப் பகுதிகளிலேயே வளர்ப்பது, காடுகளின் எல்லை ஓரமாக தடைகளை அமைப்பது, கிராம மக்களின் திறனை மேம்படுத்துவது, விழிப்புணர்வு ஏற்படுத்துவது, மனித உயிருக்கும், விவசாய பயிர்களுக்கும், உடமைகளுக்கும், விலங்குகளால் ஏற்படும் பாதிப்பிற்கு உடனடியாக இழப்பீடு வழங்குவது போன்ற பல்முனை அம்சங்களை உள்ளடக்கிய செயல்திட்டத்தினை அமல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, கோயம்புத்தூர் மாவட்டத்தில், யானைகள் தடுப்பு அகழிகள் அமைக்க 4 கோடியே 30 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ஒதுக்கி ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள். இதன் தொடர்ச்சியாக, தருமபுரி, ஈரோடு, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் யானைகள் தடுப்பு அகழிகள் அமைக்கவும் மற்றும் பல்வேறு பணிகளை நடைமுறைப்படுத்தவும், தருமபுரி வன மண்டலத்திறகு 2 கோடியே 20 லட்சத்து 59 ஆயிரம் ரூபாயும், ஈரோடு வன மண்டலத்திற்கு 2 கோடியே 14 லட்சத்து 12 ஆயிரம் ரூபாயும், திண்டுக்கல் வன மண்டலத்திற்கு 50 லட்சத்து 15 ஆயிரம் ரூபாயும், மற்றும் திருநெல்வேலி வன மண்டலத்திற்கு 34 லட்சத்து 30 ஆயிரம் ரூபாயும், ஆக மொத்தம் 5 கோடியே 19 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டுள்ளார்கள்.

தற்போது மூன்றாம் கட்டமாக, வால்பாறை பகுதியில் தடுப்பு குழிகள் அமைத்தல், எச்சரிக்கை மணி ஒலிக்கும் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல், யானைகள் விரும்பி உண்ணும் பயிர்கள் வளர்த்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள 2 கோடியே 22 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

******

இயக்குநர்:- இயக்குநர், செய்தி, மக்கள்தொடர்புத்துறை, சென்னை-9.
நாள்:– 25.3.2012